விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வக்கில்லாத த.வெ.க. அரசுக்கு சரியான பாடத்தை கற்பிக்க வேண்டும்!

தாராபுரம் தொகுதி மக்களின் உரிமைகளுக்காக சட்டமன்றத்தில் குரல் எழுப்பக் கூடியவர் வழக்கறிஞர் சுகன்யா!

குண்டடம் – நொச்சிப்பாளையத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பரப்புரை!





தாராபுரம், அக்.05 –

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தல் நடைபெறுவதையொட்டி, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், நேற்று முன்தினம் தனது தேர்தல் பரப்புரையை மேற்கொண்டார். குண்டடம் மேற்கு ஒன்றியம் நொச்சிப்பாளையத்தில் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில் அவர் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:–

இவ்வளவு சிறப்பான, அன்பான, உற்சாகமான வரவேற்பு அளித்திருக்கக்கூடிய நொச்சிப்பாளையம் பகுதி மக்களுக்கும், அத்தனை பேருக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வரவேற்பையும், எழுச்சியையும், உங்களுடைய உற்சாகத்தையும் பார்க்கும்போது, நடைபெற இருக்கும் சட்டமன்ற இடைத் தேர்தலில்... வருகிற ஒன்பதாம் தேதி, தேர்தல் முடிவுகளில் நிச்சயம் தாராபுரத்தில் வெற்றி உறுதி என்பது உங்களுடைய எழுச்சியைப் பார்க்கும்போது நன்றாகவே தெரிகின்றது.

நீங்களெல்லாம் ஏற்கனவே முடிவு செய்து விட்டீர்கள் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது. இப்படித்தான் கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னால், இதே தாராபுரத்திற்கு வந்து வாக்குக் கேட்டேன். `வெற்றி பெறச் செய்துவிடுகிறோம், சென்று வாருங்கள்' என்று சொல்லி அனுப்பி வைத்தீர்கள். கடைசியில் பெரிய அல்வாவாக கொடுத்துவிட்டீர்கள்.

மிகச் சிறந்த வேட்பாளர்!

நம்முடைய வெற்றி வேட்பாளர் அருமைச் சகோதரி சுகன்யா அவர்களை, தலைவர் அவர்கள் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். மிகச் சிறந்த வேட்பாளர். சகோதரி சுகன்யாவைப் பொறுத்தவரை நன்கு படித்தவர்; பண்பானவர்; ஒரு வழக்கறிஞர். தாராபுரம் தொகுதி மக்களான உங்களுடைய கோரிக்கைகளுக்காகவும், உரிமைகளுக்காகவும் நிச்சயம் சட்டமன்றத்தில் தன்னுடைய குரலை எழுப்பக்கூடிய ஆற்றல் படைத்தவர். நிச்சயம் தேர்தலுக்குத் தேர்தல் கட்சி மாறக்கூடியவர் கிடையாது. கொண்ட கொள்கையில், உள்ளத்தின் உறுதியில், ஏற்றுக்கொண்ட லட்சியத்தில் என்றைக்கும் மாறாமல் உறுதியோடு நிற்கக்கூடியவர். நம்முடைய கலைஞருடைய உடன்பிறப்பு, தலைவருடைய தங்கை, நம்முடைய அன்புச் சகோதரி.

நீங்கள் `பெட்டி பாமா'விற்கு வாக்களித்தீர்கள் என்றால், அவர்கள் நூற்றில் ஒருவராக இருப்பார். ஆனால், சகோதரி சுகன்யாவிற்கு வாக்களித்தீர்கள் என்றால் உங்களில் ஒருவராக நிச்சயம் இருப்பார். முதலில் நீங்களெல்லாம் யோசித்துப் பாருங்கள், இப்போது ஐந்து மாதங்களுக்கு முன்புதான் தேர்தல் நடந்தது. ஏப்ரல் 23-ஆம் தேதி தேர்தல் நடந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்து விட்டோம். ஆனால், ஒரு கட்சி ஆட்சி அமைக்க வேண்டும் என்றால் குறைந்தது 234 தொகுதிகளில் 118 சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற வேண்டும். இப்போது ஆட்சி அமைத்திருக்கிறார்களே, அவர்கள் வெறும் 107 இடங்களில் மட்டும்தான் வெற்றி பெற்றார்கள்.

பிறகு, எப்படி ஆட்சி அமைத்தார்கள் என்று நீங்கள் கேட்கலாம். எப்படி ஆட்சி அமைத்தார்கள்? நம்மோடு கூட்டணி வைத்து, நம் தலைவருடைய பெயரைச் சொல்லி, நம் தலைவருடைய புகைப்படத்தைக் காட்டி, திராவிட மாடல் அரசினுடைய சாதனைகளையெல்லாம் சொல்லி வாக்குக் கேட்டு, நம் கூட்டணியில் இருந்துகொண்டு வெற்றி பெற்றார்கள். அப்படி வெற்றிபெற்று, நம்முடைய தலைவரிடம் சொல்லிவிட்டுச் சென்றார்கள். சில பேர் சொல்லிவிட்டுச் சென்றார்கள், சில பேர் சொல்லாமல் சென்றார்கள். துரோகிகள் சிலர் சொல்லாமலே சென்றார்கள். அந்தத் துரோகிகளைக் கடைசிவரைக்கும் நாங்களும் மறக்க மாட்டோம், நீங்களும் மறக்காதீர்கள். தமிழ்நாட்டு மக்கள் மறக்க மாட்டோம். அதன் பிறகுதான் அவர்கள் ஆட்சி அமைத்தார்கள்.

பெட்டியைக் கொடுத்து விலைக்கு வாங்கிவிட்டார்!

கடந்த முறை தாராபுரத்திலிருந்து நீங்கள் ஒருவரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பினீர்கள். இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர் என்ன செய்தார்? நம்முடைய கூட்டணியிலிருந்து சில கட்சிகளைப் பிரித்தார். அதன் பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கிட்டத்தட்ட இரண்டாக உடைத்து, அதில் இருக்கக்கூடிய சில சட்டமன்ற உறுப்பினர்களைப் பெட்டியைக் கொடுத்து விலைக்கு வாங்கிவிட்டார்.

கட்சித் தலைவர்களுக்கெல்லாம் சோஃபா, வெறும் சட்டமன்ற உறுப்பினர் மட்டும் வந்தால் அவர்களுக்கு பெட்டி மட்டும்தான். அதனால்தான் நீங்கள் இப்போது இங்கு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர், இப்போது உங்களுடைய ஆளுங்கட்சியினுடைய வேட்பாளர் பெயரையே மாற்றி வைத்திருக்கிறீர்கள். அவர்கள் பெயர் என்ன? `பெட்டி பாமா'வா? அதைத்தான் நேற்று தலைவர் நேற்றுப் பேசும்போது சொன்னார்கள், `பெட்டி பாமா இல்லை, பல்டி பாமா!' சாதாரண பல்டி இல்லை; `அந்தர் பல்டி பாமா' என்று குறிப்பிட்டார்கள்.

தாராபுரம் மக்கள் ஏமாளிகளா?

நீங்கள் வாக்களித்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு. நீங்கள் வாக்களித்தது, இரட்டை இலைக்கு. உங்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு அவர்கள், சட்டமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொண்ட நாள் மே 12. ஆனால், வெறும் பன்னிரண்டே நாளில், மே 25-ஆம் தேதி அங்கு இருக்கக்கூடிய சபாநாயகரைச் சந்தித்து `நான் கட்சி மாறுகிறேன்' என்று சொல்லி, அவர்களிடம் பெட்டியை வாங்கிக்கொண்டு, உடனே ராஜினாமா செய்து, இன்றைக்கு வேறொரு கட்சியில் சென்று சேர்ந்து, அவர்களிடமும் சென்று சட்டமன்ற உறுப்பினர் வாய்ப்பைப் பெற்று, இன்றைக்கு மீண்டும் உங்களிடம் வேறு சின்னத்தில் வந்து வாக்குக் கேட்கிறார்கள் என்றால், இங்கு இருக்கக்கூடிய தாராபுரம் மக்கள் ஏமாளிகள், நாம் என்ன சொன்னாலும் கேட்பார்கள்; இங்கு இருக்கக்கூடிய தாராபுரம் மக்கள் சுயமரியாதை இல்லாதவர்கள்; அவர்கள் நிச்சயம் நம்முடைய இந்தச் சூழ்ச்சிக்கு அடிமையாகி விடுவார்கள். பயந்து வாக்களித்துவிடுவார்கள் என்கின்ற நினைப்பில் மீண்டும் உங்களைத் தேடி வந்திருக்கிறார்கள்.

நேற்று முன்தினம் பார்த்தீர்கள் என்றால், முதலமைச்சர் வந்தார். ஆனால், நீங்கள் முதலமைச்சருடைய பேச்சையெல்லாம் கேட்டிருக்கிறீர்களா? முதலமைச்சர் இப்போது இரண்டு இடங்களில் சென்று பேசினார். ஐந்து நாட்களுக்கு முன்பு மதுராந்தகத்தில் இடைத்தேர்தல். அங்கு போய்க் காட்டுக் கத்தல். பொதுவாக அவர் எந்தப் பொதுக்கூட்டத்தில் பேசினாலும் சரி, அதுவும் சட்டசபையில் பேசினால், காதில் பஞ்சு வைத்துக்கொண்டுதான் செல்ல வேண்டும். அந்த மாதிரிதான் கத்துவார். நாங்களெல்லாம், `தயவுசெய்து கத்தாதீர்கள்; இரத்த அழுத்தம் வந்துவிடப் போகிறது. கத்தாதீர்கள், கத்தாதீர்கள்" என்று சொல்லி வருகிறோம்.

தமிழ்நாட்டு மக்கள்தான் அழ வேண்டும்!

தாராபுரத்திற்கு வந்தார். தாராபுரத்தில் கத்தவில்லை. கத்தாமல் என்ன செய்துவிட்டார்? நடிக்க ஆரம்பித்துவிட்டார்! வேட்பாளர் `பெட்டி பாமா' நன்றாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்; எல்லாருக்கும் நன்றி சொல்கிறார்கள். பின்னாலிருந்து ஓர் அமைச்சர், `நீங்க பேசியதெல்லாம் போதும்; நடிப்பைத் தொடங்குங்க' என்று சொன்ன உடனே, அந்த அம்மா கதறி அழுகிறார்கள். அந்த அம்மா ஏன் அழுகிறார்கள்? அந்த அம்மாவிற்கு வாக்களித்த நீங்கள்தான் அழ வேண்டும்! இப்படி ஒரு முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்த தமிழ்நாட்டு மக்கள்தான் அழ வேண்டும்.

தலைவர் அவர்கள் சொன்னார்கள், `இவர் சீஃப் மினிஸ்டர் கிடையாது; ஒண்ணாம் நம்பர் சீப் மினிஸ்டர்" ஏனென்றால், சட்டசபையில் என்னென்ன கேலிக்கூத்துகள் நடக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். அனைவரும் சட்டசபையை நேரலையில் பார்க்கிறீர்களா? நேரலையில் எல்லாரும் பார்த்து ரசிக்கிறீர்களா? மகிழ்ச்சியாக இருக்கிறதா? நாங்கள் படுகின்ற துன்பம் எங்களுக்குத்தான் தெரியும். ஒவ்வோர் சட்டமன்ற உறுப்பினரும் பாட்டுப் பாடுகிறார்கள்! முன்பெல்லாம் சட்டமன்றத்திற்குச் சென்றோம் என்றால், 'இந்தத் தொகுதியில் இந்தப் பிரச்சினை இருக்கிறது; எங்களுக்குச் செய்து கொடுங்கள், பள்ளிக்கூடம் கட்டிக் கொடுங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டிக் கொடுங்கள், சாலை வசதி அமைத்துக் கொடுங்கள்" என்று கேட்பார்கள். அப்போது அமைச்சர்கள் பதில் சொல்வார்கள். சட்டமன்ற உறுப்பினர் கேள்வி கேட்டால் பதில் சொல்வார்கள். ஆனால், இப்போது என்ன நடக்கிறது?

நடனமும் சண்டையும் மட்டும்தான் இன்னும் போடவில்லை!

நாங்கள் கேள்வி கேட்டால் எதிர்த்துப் பாட்டுப் பாடுகிறார்கள். பிறகு நாங்கள் என்ன எதிர்ப் பாட்டா பாட முடியும்? இனிமேல் நாங்களெல்லாம் பாட்டு கிளாஸ்க்கா செல்ல முடியும்? நான் எழுந்து சொல்லிவிட்டேன், `எல்லா ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் பாட்டுப் பாடுகிறார்கள், அமைச்சர்கள் பாட்டுப் பாடுகிறார்கள், சபாநாயகரிடம் சொன்னால், அவரும் பாட்டுப் பாடுகிறார்!' முதலமைச்சர் சட்டமன்றத்தில் நடனமும் சண்டையும் மட்டும்தான் இன்னும் போடவில்லை.

ஒரு சட்டமன்ற உறுப்பினர் எழுந்து சொல்கிறார், `எங்களுக்கு முதலமைச்சர் முகம் தெரிய வில்லை, நாங்கள் பின்னால் அமர்ந்திருக்கிறோம்' என்று ஆளுங்கட்சி உறுப்பினர் சொல்கிறார், `எங்களுக்கு முதலமைச்சர் முகம் தெரிய வேண்டும்; அவர் பேசுவதை நாங்கள் பார்க்க வேண்டும்' என்று. ஆம், இவர் பெரிதாகப் பேசிச் கிழித்துவிட்டார்! பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி... அப்படி அமர்ந்திருப்பார். சில நேரம் அவர் அவையில் இருக்கிறாரா இல்லையா என்றே எங்களுக்குத் தெரியாது. எந்தக் கேள்விக்கும் பதில் சொல்வது கிடையாது.

ஒரு சட்டமன்ற உறுப்பினர் சொல்கிறார், `எங்கள் அனைவருக்கும் கையில் ஒரு தொலைக்காட்சி கொடுங்கள்; எங்களுடைய முதலமைச்சருடைய முகத்தை நாங்கள் பார்க்க வேண்டும்.' நான் கேட்டேன், 'ஆம், இப்போது அப்படியே பதில் சொல்லிச் கிழித்துவிட்டார், இவருடைய முகத்தைப் பார்க்க வேறு வேண்டுமா?'

இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் எழுந்து சொல்கிறார், `எங்கள் தலைவர் முதலமைச்சருக்கு நன்றி சொல்கிறேன். ஏனென்றால், நான் வேலையில்லாமல் இருந்தேன்; எனக்கு வேலை கொடுத்துவிட்டார். நான் வீடு இல்லாமல் இருந்தேன்; எனக்கு வீடு கொடுத்துவிட்டார் முதலமைச்சர். இப்போது எனக்குச் சமீபத்தில் காதல் தோல்வி ஆகிவிட்டது...' என்று சொன்ன உடனே, முதலமைச்சர் பின்னால் திரும்பி, அந்தச் சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்துச் சிரிக்கிறார். நான் நினைத்துக்கொண்டேன், சரி இந்த ஆட்சியில் இந்த முதலமைச்சர் இதற்கெல்லாம் திட்டம் வைத்திருப்பார்போல என்று நினைத்தேன். ஒரு நல்ல மாற்றத்தை இவர்கள் கொண்டு வந்துவிட்டார்கள் என்று. இப்படிப் பட்ட சட்டசபைதான் நடக்கிறது. சட்டம்-ஒழுங்கு பிரச்சினையைப் பற்றி நான் பேசினேன்.

ஐந்து மாதங்களில் 500 படுகொலைகள்!

கிட்டத்தட்ட 40 நிமிடங்கள் பேசினேன். 18 கேள்விகள் கேட்டேன். இந்த ஐந்து மாதங்களில் மட்டும் 500 படுகொலைகள் நடந்திருக்கின்றன. 400-க்கும் மேல் பாலியல் வன்முறைகள் நடந்திருக்கின்றன. எல்லா இடங்களிலும் போதைப்பொருள் புழக்கம் அதிகமாகிவிட்டது. ஆளுங்கட்சி உறுப்பினர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் பெயர் சரவணன், அவர் மீதே ஒரு பெண் பாலியல் வன்கொடுமைப் புகார் கொடுத்திருக்கிறார். இதற்கெல்லாம் நடவடிக்கை எடுங்கள். முதலமைச்சர் பதில் சொல்லுங்கள் என்று கேட்டேன்.

கேள்வி கேட்கக் கேட்க சபாநாயகர் என்ன சொன்னார்? 'பொறுத்திருங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, முதலமைச்சர் பதில் சொல்வார். அவர் நன்றாகத் தயாராகத்தான் வந்திருக்கிறார்' என்றார். நான் சொன்னேன், 'மூன்று நாட்கள் விடுமுறை இருக்கிறது; இன்றைக்கு வெள்ளிக்கிழமை. வெள்ளி, சனி, ஞாயிறு வீட்டில் சென்று நன்றாக ஆயத்தமாகித் தயாராக வாருங்கள்.' இவ்வளவுதான் சொன்னேன். இதில் ஒன்றும் தவறு கிடையாது. நான் இவ்வளவு கேள்விகள் கேட்கிறேன், முதலமைச்சர் தயாராக வாருங்கள் என்றேன்.

உடனே சபாநாயகர் என்ன சொல்லிவிட்டார், `என்ன நீங்கள் இப்படிச் சொல்லிவிட்டீர்கள்? எங்கள் முதலமைச்சர் எப்போதுமே தயாராகத்தான் இருப்பார்' என்றார். நான் சொன்னேன், `எப்போதுமே தயாராக இருப்பாரா? அப்படியென்றால் இப்போதே பதில் சொல்லச் சொல்லுங்கள், நான் அமர்கிறேன்' என்று கூறினேன். திடீரென்று எழுந்துவிட்டார் முதலமைச்சர். எழுந்து... நான் கூட சரி முதலமைச்சர் ஏதோ நல்ல பதில் சொல்லப் போகிறார். நாம் கொஞ்ச நேரம் அமர்ந்து கேட்போம் என்று அமர்ந்தேன். கீழேதான் சற்று தலையைக் குனிந்தேன். உடனே எழுந்து முதலமைச்சர் சொல்கிறார், மூன்று நாட்களில் நான் பதில் சொல்கிறேன், யாரும் ஓடிவிடாதீர்கள்' என்று சொல்லிவிட்டு அவர் ஓடிப் போய்விட்டார்!

நான் கீழே பார்த்துவிட்டு மேலே பார்க்கிறேன்; ஆளையே காணோம்! முதலமைச்சரையே காணோம்! நான் பேசுவதையாவது அமர்ந்து முழுமையாகக் கேட்டார். அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர், முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இருக்கிறார் அல்லவா, அவர் பேசுவதையெல்லாம் யாரும் கேட்கக்கூட இல்லைங்க. முதலமைச்சரே இல்லை! அப்படிப் பட்ட ஓர் ஓடுகாலி முதலமைச்சர்!

முதலமைச்சர்தான் இப்படி என்றால், அங்கு இருக்கக்கூடிய அமைச்சர்களுடைய லட்சணமும் உங்களுக்குத் தெரியும். ஒவ்வோர் அமைச்சரும் யார் பெயர் யாருக்கு என்று தெரியாது. எங்களை விடுங்கள், ஒவ்வோர் அமைச்சர் பெயரும் முதலமைச்சருக்கே தெரியாது. எல்லோருக்குமே இப்போது நாங்கள் பட்டப்பெயர் வைத்துத்தான் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்.

பட்டிமன்ற அமைச்சர் ராஜ்மோகன் என்று ஒருவர் இருக்கிறார். அவர் பேச ஆரம்பித்தார் என்றால், காது கொடுத்துக் கேட்டீர்கள் என்றால் திண்டுக்கல் லியோனி அண்ணன் பட்டிமன்றம் கேட்கின்ற மாதிரியே இருக்கும். முடிக்கவே மாட்டார்! என்ன சொல்ல வருகிறார் என்று யாருக்குமே புரியாது. அடுத்து, `ரீல்ஸ் அமைச்சர்' கீர்த்தனா, `முறுக்கு அமைச்சர் அறநிலையத்துறை அமைச்சர்' அடுத்து, `சங்கி அமைச்சர்'... அடுத்து, 'உருட்டுக்கட்டை அமைச்சர்' தமிழ்நாட்டினுடைய நிதித்துறை அமைச்சர்; அவருக்குப் பட்டப்பெயர் உருட்டுக்கட்டை அமைச்சர்.

அடுத்து, 'பவுடர் அமைச்சர்'... கில்லி சரத் என்று ஒருவர் இருக்கிறார். ஏன் தெரியுமா? சென்னையில் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் 40,000 பேர் கூடியிருக்கின்ற மக்கள் கூட்டத்தில், அங்கு பவுடர் போடுகிறார்... போதைப் பவுடர்!

அடுத்து, `திருட்டு வி.சி.டி. அமைச்சர்'... அடுத்து, 'திருட்டு லாட்டரி அமைச்சர்'... இப்படி நான் அமைச்சர் பெயரைச் சொன்னால் உங்களுக்குத் தெரிந்திருக்காது. ஆனால், இந்தப் பட்டப்பெயர் சொன்னால் மட்டும்தான் உங்களுக்குத் தெரிகிறது. இப்படித்தான் இந்த ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது.

இந்த ஆட்சிக்கு ஒரு சரியான பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என்றால், வருகின்ற சட்டமன்ற இடைத்தேர்தல் ஆறாம் தேதி, இன்றைக்கு மூன்றாம் தேதி. இன்னும் நம்முடைய கைகளில் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன. நீங்கள் அத்தனை பேரும் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

ஒன்று மின்வெட்டு! இன்னொன்று அரிவாள் வெட்டு!

நம்முடைய தலைவர் பேசும்போது சொன்னார், இந்த முதலமைச்சருக்கு அவருடைய மொழியிலேயே சொல்கிறேன். இந்த ஆட்சியில்... இந்த வெட்கங்கெட்ட ஆட்சியில் இரண்டே பேருக்கு நடுவில்தான் போட்டி. ஒன்று மின்வெட்டு! இன்னொன்று அரிவாள் வெட்டு!

மின்வெட்டு, இந்த ஆட்சி அமைந்ததிலிருந்து தொடர்ந்து எட்டு மணி நேரம் அனைத்து இடங்களிலும் மின்வெட்டு. முதலமைச்சருடைய சொந்தத் தொகுதி பெரம்பூரில் மின்சாரம் கிடையாது. பெரம்பூரில் தினமும் மக்கள் குடும்பத்துடன் சாலையில் வந்து மறியல் செய்துகொண்டிருக்கிறார்கள். முதலமைச்சருடைய சொந்தத் தொகுதியிலேயே இந்த நிலைமை! அமைச்சர்கள் பங்கேற்கின்ற எல்லாக் கூட்டங்களிலும் மின்வெட்டு.

சரியான பாடம் புகட்டுங்கள்!

அதுமட்டுமல்ல, விலைவாசி உயர்வு. நம்முடைய ஆட்சியில்... தி.மு.க. ஆட்சியில் அரிசி ஒரு கிலோ 50 ரூபாயாக இருந்தது. இப்போது த.வெ.க ஆட்சியில் ஒரு கிலோ அரிசி 70 ரூபாய். சர்க்கரை, நம்முடைய ஆட்சியில் ஒரு கிலோ சர்க்கரை 40 ரூபாய். இன்றைக்கு த.வெ.க ஆட்சியில் 60 ரூபாய். ஒரு கிலோ புளி நம்முடைய தி.மு.க. ஆட்சியில் 180 ரூபாய்; இன்றைக்கு த.வெ.க ஆட்சியில் 230 ரூபாய். சமையல் எண்ணெய் ஒரு லிட்டர் நம்முடைய ஆட்சியில் 165 ரூபாய்; இன்றைக்கு 200 ரூபாய். பூண்டு ஒரு கிலோ நம்முடைய ஆட்சியில் 240 ரூபாய்; இன்றைக்கு 310 ரூபாய். மிளகாய் நம்முடைய ஆட்சியில் ஒரு கிலோ 360 ரூபாய்; இன்றைக்கு 420 ரூபாய். இதையெல்லாம் கட்டுப்படுத்த வக்கில்லாத இந்த அரசுக்கு, ஒரு சரியான பாடத்தை, இந்த இடைத்தேர்தலில் நீங்கள் கற்பிக்க வேண்டும்.

100 நாள் வேலை வாய்ப்புத் திட்டம். இங்கு இருக்கக்கூடிய மக்கள் நீங்கள் நிறைய பேர் அந்தத் திட்டத்தில் நம்முடைய ஆட்சியில் பயனடைந்திருப்பீர்கள். அது இன்றைக்குச் சரியாக வருகிறதா உங்களுக்கு? கிடையாது. 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தை இன்றைக்கு ஒன்றிய அரசு 125 நாட்களாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இங்கு இருக்கக்கூடிய ஆளுங்கட்சி 10 நாட்கள்கூட உறுதி செய்வது கிடையாது. 10 நாட்கள்கூட 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தில் வேலை கொடுப்பது கிடையாது. அப்படியே வேலை கொடுத்தாலும், 10 நாட்களுக்குக் கொடுப்பது இல்லை, அப்படியே கொடுத்தாலும் அதற்கான சரியான ஊதியத்தையும் கொடுப்பது இல்லை. 100 நாள் வேலைக்கு இன்றைக்குப் பல கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறார்கள்; விதிகளைப் போட்டிருக்கிறார்கள்.

வீட்டிற்கு வரி கட்டியிருக்க வேண்டும், குடிநீர் வரி கட்டியிருக்க வேண்டும். இப்படிப் புதிதாக நிறைய விதிகளை விதித்திருக்கிறார்கள். நம்முடைய ஆட்சியில் இந்த மாதிரி கிடையாது. நாம் 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டத்தையும் சரியாகக் கொடுத்தோம்; உடனுக்குடன் அதற்கான ஊதியத்தையும் கொடுத்தோம்.

அதேமாதிரி, 10 கோடி ரூபாயில் பி.ஏ.பி. (PAP) கால்வாய் திட்டம் நம்முடைய தி.மு.க. ஆட்சியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தூர்வாரி அனைத்தையும் செய்து கொடுத்தார்.

நம்முடைய கழக ஆட்சியில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் சரியாக ஒவ்வொரு வருடமும் 2,000 கன அடித் தண்ணீரை நம்முடைய ஆட்சியில் நம்முடைய தலைவராக இருந்த முதலமைச்சர் அவர்கள் திறந்து விட்டார். அதனால், இந்தப் பகுதியில் தென்னை விவசாயம் செழிப்பாக, சரியான நேரத்திற்கு நடந்தது.

ஆனால் இந்த ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து முறையாகத் தண்ணீர் திறந்து விடவில்லை. இதனால் இன்றைக்குத் தென்னையெல்லாம் காய்ந்து போயிருக்கிறது.

மிகப்பெரிய வெற்றி!

தி.மு.க. இன்றைக்குக் களத்தில் இறங்கிப் போராட்டம் செய்ததால், வலியுறுத்தியதால் இப்போது தண்ணீரைச் சில நாட்களாகத் திறந்து விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த இடைத் தேர்தலுக்கு முழு காரணமாக இருந்த முதலமைச்சருக்கு ஒரு சரியான பாடத்தை நீங்கள் கற்பிக்க வேண்டுமென்றால், வருகின்ற ஆறாம் தேதி நம்முடைய வெற்றி வேட்பாளர் சகோதரி சுகன்யா அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தர வேண்டும்.

இங்கு வந்திருக்கக்கூடிய வாக்காளர் பெருமக்கள், உங்கள் அத்தனை பேரையும் நான் கேட்டுக்கொள்வதென்னவென்றால், நம்முடைய கைகளில் இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன. வருகின்ற இரண்டு நாட்களில் நீங்கள் யார் யாரையெல்லாம் சந்திக்கிறீர்களோ உங்களுடைய உறவினர்கள், உற்றார்கள், நண்பர்கள், உங்கள் பக்கத்து வீட்டுக்காரர், எதிர் வீட்டுக்காரர், உங்களுக்குத் தெரிந்தவர்கள் அவர்களையெல்லாம் பார்க்கும்போது நீங்கள் சொல்லுங்கள், பிரச்சாரம் செய்யுங்கள்.

`ஏன்? சுகன்யா அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும்? ஏன் தாராபுரத்தில் உதயசூரியன் சின்னம் வெற்றி பெற்றுக் காட்டவேண்டும்? ஏன் நம்முடைய சுகன்யாவைச் சட்டமன்ற உறுப்பினராக அனுப்ப வேண்டும்' என்கின்ற பிரச்சாரத்தை அடுத்த இரண்டு நாட்கள் நீங்கள் சிறப்பாகச் செய்தீர்கள் என்றால், நிச்சயம் கடந்த முறை செய்த தவற்றை இந்த முறை நாம் சரி செய்துவிடலாம்.

நிச்சயம் தாராபுரத்தில் மீண்டும் உதயசூரியன் வெற்றி பெற்றுவிட்டது என்கின்ற வெற்றிச் செய்தி ஒன்பதாம் தேதி வர வேண்டுமென உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவருடைய மகனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாக, குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய பேரனாக இருந்து கேட்கிறேன்.

வருகின்ற இடைத்தேர்தலில் சகோதரி சுகன்யா அவர்களுக்கு வாக்களித்து, மிகப்பெரிய வெற்றியை நீங்கள் தேடித்தாருங்கள் என்று உங்களையெல்லாம் மீண்டும் மீண்டும் கேட்டு, இந்தச் சிறப்பான வரவேற்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

பங்கேற்றவர்கள்!

கழகத்தின் முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என். நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் அந்தியூர் செல்வராஜ், வெள்ளக்கோவில் சாமிநாதன், மேற்கு மண்டலப் பொறுப்பாளர் செந்தில் பாலாஜி, திருப்பூர் மாவட்டக் கழகச் செயலாளர் பத்மநாபன், முன்னாள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் சீனிவாசன், ஜெயக்குமார், மாவட்டக் கழகச் செயலாளர்கள் செல்வராஜ், கிரகாம்பெல், முத்தமிழ்ச்செல்வன், தளபதி முருகேசன், தொண்டாமுத்தூர் ரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பிரபாவதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், பொதுக்குழு உறுப்பினர் கருணாகரன், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் முத்துக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் சந்திரசேகர், சிவபிரகாஷ், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் இன்பரசு, ஆனந்தகுமார், ஆதிதிராவிடர் அணி இணைச் செயலாளர் திப்பம்பட்டி கணேசன், பேரூர் கழகச் செயலாளர்கள் அன்பரசு, ராமசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், சக்திவேல், விஸ்வநாத், அருண்பிரசன்னா, மணிகண்டன், சுமன், தினேஷ் ராஜன், சிலோகர், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.